கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை

## உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

# மக்கள் சாசனம்

©
தமிழ்நாடு அரசு
2018

# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

# மக்கள் சாசனம் 2018

**பொது விநியோகத் திட்டம்**

மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013, தமிழ்நாட்டில் 01.11.2016 முதல் அரசு ஆணை நிலை எண். 124, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் : 27.10.2016–ன்படி அமல்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பொதுவிநியோகத் திட்டம் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். வருமான அடிப்படையில் இல்லாமல், ஏழை எளிய மக்கள் எவரும் விடுபடாமல், அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பாகுபாடற்ற அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தை தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்கப்படும் அளவீட்டு முறையில் யூனிட் முறை மாற்றம் செய்யப்பட்டு நபர்கள் வீதம் கணக்கிடப்படுகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA)-2013 வரையறுக்கப்பட்ட அளவின் அடிப்படையில் அரிசி வழங்கப்படுவதுடன் ஏற்கனவே குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அரிசியின் அளவை குறைவு செய்யாமலும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமலும் இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தியோதயா அன்னயோசனா குடும்ப அட்டைதாரர்களுக்கு எவ்வித மாறுபாடுமின்றி தொடர்ந்து குடும்ப அட்டை ஒன்றுக்கு 35 கிலோ வீதம் விலையின்றி அரிசி வழங்கப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட் களின் அளவில் மாற்றம் இல்லாமல் வழங்கினாலும் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013–ன்படி முன்னுரிமை பயனாளிகளை தேர்வு செய்தல் அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளை வீடு வீடாகச் சென்று முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள் / முன்னுரிமை அல்லாத குடும்ப அட்டைதாரர்கள் என தலத் தணிக்கை மூலம் கண்டறிந்த பின்னர் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தினை முழு கணினிமயமாக்குதலின் கீழ் அனைத்து நடவடிக்கைகளையும் கணினி வழி கண்காணிக்கவும், தற்போது நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளை ஆதார் எண் விவரம் இணைத்து சரிபார்க்கப்பட்ட தரவுத்தொகுப்பு உருவாக்கப்பட்டும், அதன்படி மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. இப்பணிகளை தமிழகம் முழுவதும் மேற்கொள்வதற்காகவும், அதன் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டு காலத்திற்கு பராமரித்து வரவும் இத்திட்டத்திற்கென ஒரு திட்ட ஒருங்கிணைப்பாளர் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உபயோகப்படுத்தப்படும் மென்பொருள் மற்றும் இதர நடைமுறைகள் பரிசோதனை முறையில் உபயோகப்படுத்தப்பட்டு தற்போது தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கிட, அனைத்து நியாய விலைக் கடைகளிலும் உள்ள விற்பனை முனையம் வழியாக குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் அட்டையினை ஸ்கேன் செய்து விவரங்கள் தொகுப்பட்டது. அதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 01.04.2017 அன்று புதிய மின்னணு குடும்ப அட்டைகள் பயனாளிகளுக்கு வழங்கி துவக்கப்பட்டது.

பொது விநியோகத் திட் டத்தினை கணினி வழி கண்காணிக்க புதிய இணையம் சார்ந்த அமைப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் மூலம் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆன்லைன் வாயிலாக ஒவ்வொரு நியாய விலைக் கடைகளுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் ஒதுக்கீடு, அத்தியாவசியப் பொருட்கள் கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்புதிய வகை சார்ந்த அமைப்பு மூலம் தகுதியற்ற குடும்ப அட்டைகள்

மற்றும் முறைகேடாக விற்பனை பட்டியலிடுதல் முழுவதும் ஒழிக்கப்படும். இதனால் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தல் தடுக்கப்படும். ஆதார் எண் அடிப்படையில் குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதுடன் அத்தியாவசியப் பொருட்கள் நுகர்வு விவரங்கள் குடும்ப அட்டைதாரர்களின் கைபேசியில் குறுஞ்செய்தியாக வரும் வசதியும் செய்யப்பட்டு முழுவதுமாக செயல்பாட்டில் உள்ளது, குடும்ப அட்டைதாரர்கள் பொது விநியோகம் சம்பந்தமான தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு கட்டணமில்லா தொலைபேசி வசதி சென்னை (நகரம்) வடக்கு / தெற்கு உள்ளிட்ட 33 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. வலைதளம் மூலம் முகவரி மாற்றம், பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம் போன்றவைகளை குடும்ப அட்டைதாரர்களே மாற்றிக் கொள்ளும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்கள் வலைதளத்தில் புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்க வசதிகள் ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**(அ) மாநில உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கான சாசனம்**

1. அட்டைதாரர்கள் எவ்வித சிரமமுமின்றி திருப்தியுடன் தங்களுக்குரிய பொருட்களை அனைத்து மாவட்டங்களிலும் மாதா மாதம் பெறுவதை உறுதி செய்தல்.

2. சார்நிலை அலுவலர்கள் அட்டைதாரர்களின் புகார்களை உடனுக்குடன் தீர்வு செய்வதை கண்காணித்து உறுதி செய்தல்.

3. தகுதியற்ற குடும்ப அட்டைகளை களைதல், தவறு இழைக்கும் பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் கடத்தல்காரர்கள் மீது கடும் குற்றவியல் நடவடிக்கை எடுத்தல்.

4. பணியாளர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி மற்றும் செயல்முறைகளை மேம்படுத்துதல்.

**(ஆ) மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள்/ துணை ஆணையர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்களுக்கான சாசனம்**

1. மனுதாரர்கள் மற்றும் குடும்ப அட்டைதாரர்களை கனிவுடன் கையாளுதல் மற்றும் அவர்கள் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமோ பொது விநியோகத் திட்டம் தொடர்பாக கோரும் தகவல்களை அளித்தல்.
2. மக்கள் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவுக்குள் குடும்ப அட்டைதாரர்கள் கொடுக்கும் மனுக்கள் வட்ட வழங்கல் அலுவலர் / உதவி பங்கீட்டு அலுவலர்கள் / உதவி ஆணையாளர்கள் தீர்வு செய்வதை கண்காணித்தல்.
3. ஒவ்வொரு மாதமும் மாவட்டத்திலுள்ள எல்லா வட்டங்களுக்கும் அத்தியாவசிய பொருட்களுக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்குதல்.
4. நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் முறையாக நகர்வு செய்யப்படுவதையும் நியாயவிலைக் கடைகளில் போதிய அளவு அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைக்கப்படுவதையும் கண்காணித்தல்.
5. பொது விநியோகத் திட்டம் மற்றும் நியாய விலைக் கடைகள் தொடர்பான பொது மக்களின் குறைகளை உரிய முறையில் தீர்வு செய்தல்.
6. அந்தியோதயா அன்னயோசனா திட்டத்திற்கு தகுதியான பயனாளிகள் தேர்ந்து எடுக்கப்படுவதை கண்காணித்தல்.

7. தகுதியற்ற குடும்ப அட்டைகளை களைதல்; கடத்தல் மற்றும் கள்ளச் சந்தையை தடுத்தல்.

**(இ) வட்ட வழங்கல் அலுவலர்/ உதவி பங்கீட்டு அலுவலர் / உதவி ஆணையர் அலுவலகங்களுக்கான சாசனம்**

இச்சாசனத்தின்படி அடியிற் குறிப்பிட்டுள்ளவாறு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பல்வேறு சேவைகளை அனைத்து மாவ ட்டங்களிலும் உள்ள வட்ட வழங்கல் அலுவலர்கள், கோயம்புத்தூர் சரகத்தில் செயல்படும் உதவி பங்கீட்டு அலுவலர்கள் மற்றும் சென்னை நகரத்தில் செயல்படும் மண்டல அலுவலகங்களில் வழங்க வேண்டியது இவர்களின் பொறுப்பாகும்.

1. மனுதாரர்கள் மற்றும் மின்னணு குடும்ப அட்டைதாரர்களை கனிவுடன் கையாளுதல் மற்றும் அவர்கள் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமோ பொது விநியோகத் திட்டம் தொடர்பாகக் கோரும் தகவல்களை அளித்தல்.
2. பெறப்படும் ஆன்லைன் மனுக்களுக்கு அதன் பதிவு எண், பெறப்பட்ட நாள் மற்றும் அம்மனு மீது இறுதி முடிவை தெரிவிக்கும் நாள் ஆகியவற்றை குறிப்பிட்டு மனுதாரருக்கு ஒப்புதல் சீட்டு ஆன்லைனில் பதிவிறக்க உதவுதல்.
3. மனுக்களை இந்த சாசனத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வு செய்தல் மற்றும் கீழ்க்கண்ட சேவைகளை அளித்தல்.

- புதிய மின்னணு குடும்ப அட்டைகளுக்கான ஆன்லைன் விண்ணப்பங்கள் தீர்வு செய்தல்
- மின்னணு குடும்ப அட்டைகளில் மாற்றங்களை செய்தல்.
- வட்டத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கான ஒதுக்கீடு ஆணை வழங்குதலை ஆன்லைனில் கண்காணித்தல்.
- அத்தியாவசியப் பொருட்களின் நகர்வை முறையாக கண்காணித்தல் மற்றும் நியாய விலைக் கடைகளில் அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு தேவையான போதிய அளவு அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்தல்.
- பொது விநியோகத் திட்டம் மற்றும் நியாய விலைக் கடைகள் தொடர்பாக பொது மக்கள் தெரிவிக்கும் ஆன்லைன் புகார் மற்றும் புகார் மனுக்களை முறையாக தீர்வு செய்தல்.

தகுதியற்ற குடும்ப அட்டைகளைக் களைதல் மற்றும் கடத்தல் மற்றும் கள்ளச் சந்தையை தடுத்தல்.

**அ) புதிய மின்னணு குடும்ப அட்டை வழங்குதல்**

**(I) தனியாக புதிய மின்னணு குடும்ப அட்டை பெறத் தகுதியுடையவர் யார்?**

- விண்ணப்பதாரர் மற்றும் அவருடைய குடும்பம் இந்திய குடியுரிமை பெற்றவராக இருத்தல் வேண்டும். அவர்களின் ஆதார் எண்கள் மற்றும் செல்பேசி எண் அளிக்க வேண்டும்.

- விண்ணப்பதாரர் மற்றும் அவருடைய குடும்பம் தனி சமையலறையுடன் தனியாக வசிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் விண்ணப்பத்தில் அவர் குறிப்பிட்டுள்ள அவரது குடும்ப உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் (மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில்) வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களின் ஆதார் எண்கள் இந்தியாவில் எங்கும் குடும்ப அட்டையில் இடம் பெற்றிருத்தல் கூடாது.

(ii) **மின்னணு குடும்ப அட்டை பெற விண்ணப்பப் படிவம் ஏதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா ?**

தமிழ்நாடு அரசு புதிய மின்னணு குடும்ப அட்டைக்கான ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தினை ஆங்கிலம் மற்றும் தமிழில் நிர்ணயித்துள்ளது. இத்துறையின் www.tnpds.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது. இதில் ஆன்லைனில் விண்ணப்பித்து அதன் மூலம் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் பெற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**(iii) மின்னணு குடும்ப அட்டைகள் பெற விருப்பத்தேர்வுகள்:–**

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்கள் தங்களின் தேவை மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் தங்களுக்கான குடும்ப அட்டை வகையினை தேர்வு செய்ய வழி வகை செய்யப்பட்டுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் தகுதியான அளவு ஆகியவற்றின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. வகைப்படுத்தப்பட்ட மின்னணு குடும்ப அட்டைகளின் விவரம் மற்றும் அவற்றிற்கு பெறத்தகுதியான அத்தியாவசியப் பொருட்கள் அளவு விவரம் பின்வருமாறு.

| வ. எண் | குடும்ப அட்டையின் வகை | தகுதியான அத்தியாவசியப் பொருட்கள் விபரம் |
|---|---|---|
| 1 | முன்னுரிமை குடும்ப அட்டைகள் (PHH) | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் |
| 2 | முன்னுரிமை குடும்ப அட்டைகள் – அந்தியோதயா அன்னயோசனா (PHH-AAY) | 35 கிலோ அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் |
| 3 | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (NPHH) | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் |
| 4 | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள்– சர்க்கரை (NPHH-S) | அரிசி தவிர பிற அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் கூடுதல் 3கிலோ சர்க்கரை |
| 5 | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் – எப்பொருளும் இல்லாதவை (NPHH-NC) | எப்பொருளும் இல்லாதவை |

**(iv) புதிய மின்னணு குடும்ப அட்டை கோரி விண்ண ப்பம் அளிக்கும் போது என்ன ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும். புதிய மின்னணு குடும்ப அட்டை மனு எவ்வாறு பரிசீலிக்கப்படும் ?**

- அனைத்து குடும்ப நபர்களுக்கும் ஆதார் அட்டை பதிவேற்றப்பட வேண்டும். 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆதார் இல்லையெனில் பிறப்பு சான்று பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- குடும்பத் தலைவர் புகைப்படம் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- தமிழ் நாட்டில் தற்போதைய முகவரியில் வசிப்பதற்கான ஆதார ஆவணங்கள் (உ.ம். ஆதார் அடையாள அட்டை, தொலைபேசிக் கட்டணப் பட்டியல், வாக்காளர்அடையாள அட்டை, ஒட்டுநர் உரிமம், கடவுச் சீட்டின் ஒளிநகல் முதலானவற்றில் ஏதேனும் ஒன்று பதிவேற்றம் செய்ய வேண்டும்)
- குடும்பத்தலைவரின் புகைப்படம் வழங்க வேண்டும்.

**(எ) மின்னணு குடும்ப அட் டை சம்பந்தமாக அளித்த விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டால் மேல்முறையீடு செய்ய வேண்டிய அலுவலர் யார் ?**

- சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொறுத்த வரை துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு/ தெற்கு உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை 5 மேல்முறையீடு அலுவலர்ஆவார். மற்ற பகுதிகளைப் பொறுத்த வரை அந்தந்த மாவட்ட வழங்கல் அலுவலரிடம் மேல்முறையீடு அளிக்கலாம்.

**(vi) மின்னணு குடும்ப அட்டை பெற கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா ?**

1. மின்னணு குடும்ப அட்டை விலையின்றி வழங்கப்படுகிறது.

**(vii) தற்போது உள்ள மின்னணு குடும்ப அட்டையில் புதிய குடும்ப உறுப்பினரை சேர்க்க முடியுமா ?**

குடும்ப அட்டைதாரரின் நெருங்கிய உறவினராக இருந்தால் அவர் நிரந்தரமாக குடும்ப அட்டைதாரரின் இல்லத்திற்கு குடிபெயர்ந்து வந்து விட் டால் அவரது பெயரை அல்லது புதிதாக பிறந்த குழந்தையின் பெயரை குடும்ப அட்டையில் கீழ்க்கண்ட வழிமுறைப்படி சேர்க்கலாம்.

- குடும்ப அட்டைக்குரிய குடும்ப தலைவர் ஆன்லைனில் விண்ணப்பம் செய்ய வேண்டும். சேர்க்கப்பட வேண்டிய குடும்ப உறுப்பினர் பெயர், குடும்ப தலைவருக்கு இவரது உறவு முறை ஆகியவற்றை குறிப்பிட்டு அவரது விவரங்கள் பதிவு செய்து ஆதார் அட்டையினை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

- குடும்ப அட்டைதாரரின் குடும்பத்தில் இணைக்கப்படும் நபர் 5 வயதுக்குட்பட்ட குழந்தையாக இருந்தால் அதற்கான பிறப்புச்சான்றிதழ் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**(viii) குடும்ப அட்டையிலிருந்து குடும்ப உறுப்பினர் ஒருவர் பெயரை நீக்க மனு செய்வது எப்படி ?**

குடும்ப உறுப்பினர் ஒருவர் இறந்து விட்டாலோ அல்லது பிரிந்து சென்று விட்டாலோ அவர் பெயரை நீக்க குடும்பத் தலைவர் ஆன்லைன் மூலம் மனு செய்யலாம். நீக்குதலுக்கான காரணம் பதிவு செய்வதுடன் அதற்கான சான்று பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**(ix) குடும்ப அட்டையில் முகவரி மாற்றத்தை பதிவு செய்வது எப்படி ?**

-  இணையதளத்தில் ஆன்லைன் முறையில் புதிய முகவரியினை பதிவு செய்து அந்த முகவரிக்கான ஆதார ஆவணம் ஏதேனும் ஒன்று பதிவேற்றம் செய்து, முகவரி மாற்றம் செய்யலாம்.
-  புதிய குடும்ப அட்டை விண்ணப்பம் மாற்றங்களுக்கு ஆன்லைனில் மனு பதிவு செய்யப்பட்டவுடன் கணினி மூலமாக ஒப்புதல் சீட்டு பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.
-  கோரிக்கை ஏற்கப்பட்ட பின்னர் அதற்கான சான்று ஆன்லைனில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
-  பதிவு செய்யும்போதும் ஏற்பு அல்லது நிராகரிப்பு ஆணை வழங்கப்படும்போதும் அட்டைதாரரின் பதிவுசெய்யப்பட்ட செல்பேசிக்கு குறுஞ்செய்தியில் விவரம் வழங்கப்படும். இம்மாற்றங்கள் தொடர்பாக அட்டை வழங்கும் அலுவலர்களை குடும்ப அட்டைதாரர்கள் நேரில் அணுக வேண்டிய அவசியமில்லை.

(x) **அந்தியோதயா அன்னயோசனா திட்டத்தின் கீழ் பயனாளியாக சேர ஒரு குடும்ப அட்டைதாரர் எவ்வாறு மனு செய்ய வேண்டும் ?**

தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் 2013ன்படி அந்தியோதயா அன்னயோசனா திட்டத்தின் கீழ் வறியவர்களில் வறியவர்களுக்கு மாதம் 35 கிலோ அரிசி வழங்க ஆணைகள் பிறப்பித்தது. அதன்படி அந்தியோதயா அன்னயோசனா திட்டத்தின் கீழ் பயனாளியாக சேருவதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி ஆக வேண்டும்:–

-  மனுதாரர் அந்தியோதயா அன்னயோசனா பயனாளிகள் விண்ணப்ப படிவத்தில் வட்ட வழங்கல் அலுவலர் அல்லது உதவி ஆணையாளருக்கு மனு செய்வதுடன் கீழ்க்கண்ட நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.
-  மனுதாரர் எல்லா அத்தியாவசிய பொருள்களும் பெறுவதற்கான PHH முன்னுரிமை குடும்ப அட்டை பெற்றிருக்க வேண்டும்.
-  அந்தியோதயாஅன்னயோசனா திட்ட பயனாளிகளை தேர்வு செய்வதற்கு நிர்ணயித்துள்ள தகுதியினை மனுதாரர் குடும்பம் பெற்றிருக்க வேண்டும்.
-  பயனாளியின் தகுதியை ஆய்வு செய்து அவர் இத்திட்டத்தில் சேரத் தகுதியானவர் என்று உள்ளாட்சி அமைப்புகள் தீர்மானம் இயற்றி வட்ட வழங்கல் அலுவலர் / உதவி ஆணையருக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.
-  வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/ பழங்குடியினர் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
-  மனுதாரர் மனுவினை வட்ட வழங்கல் அலுவலகம்/ உதவி ஆணையர் அலுவலகத்தில் கொடுத்து மனு வரிசை எண் மற்றும் தேதி குறிப்பிட்ட ஒப்புதல் சீட்டை பெற்றுக் கொள்ளலாம்.

**மனு கீழ்க்கண்டவாறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது**

-  மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து பரிந்துரை பெற்ற பின்னர் தலத்தணிக்கைக்கு பின்பு மனுதாரரின் குடும்பம் அந்தியோதயா அன்னயோசனா பயனாளியாக தேர்வு செய்யப்படுவதற்கு தகுதியான குடும்பமா என்பதனை வட்ட வழங்கல் அலுவலர்/ உதவிஆணையாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு மனுதாரரைஅந்தியோதயா அன்னயோசனா திட்ட பயனாளியாக சேர்க்க ஆணை பிறப்பிக்கவேண்டும்.
- ஆணை பிறப்பித்த பின் அதன் விவரத்தை மனுதாரருக்கு தெரிவித்து குடும்ப அட்டையுடன் வட்ட வழங்கல்/ உதவி ஆணையர் அலுவலகத்தில் நேரில் ஆஜராக தெரிவிக்க வேண்டும். இந்த நடைமுறை மனு பெறப்பட்ட 60 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.
- மனு நிராகரிக்கப்பட்டால் அதன் விவரம் பதிவு செய்யப்பட்ட மனுதாரர் செல்பேசிக்கு குறுச்செய்தி மூலம் அதற்கான காரணத்தை குறிப்பிட்டு தெரிவிக்கப்படும்.
- முன்னுரிமை மின்னணு குடும்ப அட்டை பயனாளிகளின் பட்டியல் கிராம சபையின் முன் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெற வேண்டும்.

**(xi) மின்னணு குடும்ப அட்டைகள் தொடர்பாக இதரகோரிக்கைகளை பரிசீலிக்க என்ன நடைமுறைகள் பின்பற்றப்படும் ?**

- மனுதாரர் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் கோரிக்கைகள் தேவைப்படின் தல விசாரணைக்கு அனுப்பப்படும். தலவிசாரணை செய்யும் அலுவலர் மனுதாரரின் வீட்டினை தணிக்கை செய்து மனுதாரர் குடும்பம் தனியாக வசிக்கிறதா ? தனி சமையல் அறை உள்ளதா ? என்பதனை ஆய்வு செய்வார்.

- இவ்வாறு தணிக்கை அலுவலர்கள் மனுதாரரின் வீட்டிற்குச் செல்லும் போது மனுதாரர் தணிக்கை அலுவலரின் அடையாள அட்டையைக் கோரி அதனைப் பார்த்த பின்பு வீட்டை ஆய்வு செய்ய அனுமதிக்கலாம்.

-  உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அதன் அலுவலர்கள் நன்னடத்தையுடன் உயர்வான செயல்பாட்டுடன் இருப்பதையும் எப்போதுமே விரும்புகிறது. மனுதாரர்கள் அலுவலர்களின் தவறான நடத்தை தொடர்பாகவோ அல்லது சேவைகளுக்கு கையூட்டு ஏதும் கோரினால் தொலைபேசி மூலமாகவோ அல்லது மின் அஞ்சல் மூலமாகவோ உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையருக்கு புகார்அளிக்கலாம்.

- வட்ட வழங்கல் / உதவி ஆணையாளர்அலுவலகத்தில் மனு பெறப்பட்ட 15 நாட்களுக்குள் தலத்தணிக்கை முடிக்கப்பட வேண்டும். அவ்வாறு 15 நாட்களுக்குள் தலத்தணிக்கைப் பணி முடியவில்லையெனில் மனுதாரர் வட்ட வழங்கல் அலுவலர் / உதவி ஆணையரிடம் இது தொடர்பாக தெரிவிக்கலாம்.

- வழங்கல் / உதவி ஆணையாளர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத நிலையில் துணை ஆணையாளர் / மாவட்ட வழங்கல் அலுவலர் ஆகியோரிடம் புகார் வழங்கலாம்.

 தலத்தணிக்கையில் மனு தகுதியானது எனக் கண்டறியப்பட்டால் வட்ட வழங்கல் அலுவலர் / உதவி ஆணையாளர் மனுவிற்கு ஒப்புதல் அளித்து மின்னணு குடும்ப அட்டை அச்சடிப்பதற்காக பரிந்துரை செய்யவேண்டும்.

**(xii) மனுதாரர் எவ்வாறு அவரது புதிய குடும்பஅட்டையை பெற்றுக் கொள்வது ?**

 வட்ட வழங்கல் / உதவி ஆணையர்அலுவலகத்திலிருந்து குடும்ப அட்டை தயாராக உள்ள விவரம் மனுதாரருக்கு குறுஞ்செய்தி / இணையம் வாயிலாக அறிய இயலும். தகவல் பெறப்பட்ட 15 நாட்களுக்கு பின்பு அலுவலக நாளில் வட்ட வழங்கல்/ உதவி ஆணையர் அலுவலகத்திற்கு சென்று குடும்ப அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும். மனுதாரர் அவரது அடையாளத்தை உறுதி செய்யும் ஆவணத்தையும் வட்ட வழங்கல் அலுவலரிடம் காட்ட வேண்டும்.

**(xiii) குடும்ப அட்டை சம்பந்தமான மனுக்களை வட்ட வழங்கல் /உதவிஆணையாளர் அலுவலகத்தில் தீர்வு செய்ய நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசம் விவரம் பின்வருமாறு:–**

| *எண்* | *பணியின் வகை* | *காலவரை (தேவையான ஆதாரம் அளிக்கப்படும் பட்சத்தில்)* | *விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அலுவலர்* |
|---|---|---|---|
| 1 | குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைச் சேர்த்தல் நீக்குதல் வயது திருத்தம் (அந்த பகுதி உணவு பங்கீட்டு அலுவலகத்தில் அளிப்பதன் பேரில்) | தேவையான ஆதாரத்துடன் குடும்பஅட்டைகள் அளிப்பதன் பேரில் மூன்றாம் நாள் | உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலர் |
| 2 | முகவரி மாற்றம் (அதே நியாய விலைக் கடையின் அதிகார வரம்பிற்குள்) | மூன்று நாட்கள் | உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலர் |
| 3 | முகவரி மாற்றம் (கடை மாற்றத்துடன்) | மூன்று நாட்கள் | உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலர் |
| 4 | மாநிலத்திற்குள் வேறு மாவட்டம் அல்லது தாலுகா / மண்டலத்திற்கு முகவரி மாற்றம் | மூன்று நாட்கள் | உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலர் |
| 5 | வேறு மாநிலத்திலிருந்து மாற்றப் பட்டு வரும் நேர்வில், தேவையான ஆதாரம் அளிக்கப்படுவதற்கு உட்பட்டு குடும்ப அட்டை புதிதாக வழங்குதல் | 60 நாட்கள் | உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலர் |
| 6 | அந்தியோதயா அன்னயோசனா திட்டத்தில் பயன்பெற | 30 நாட்கள் | மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட வழங்கல் அதிகாரி |
| 7 | பொது விநியோகக் கடை பற்றிய புகார் | 30 நாட்கள் | மாவட்ட ஆட்சி தலைவர் / மாவட்ட வழங்கல் அலுவலர் / துணை ஆணையர்/உதவி ஆணையர் / வட்ட வழங்கல் அலுவலர் |

| | | | |
|---|---|---|---|
| 8 | பொது விநியோகத் திட்டம் பற்றி தகவல் அறியும் சட்டம் 2005 ன் கீழ் தகல்கள் பெற | 30 நாட்கள் | மாவட்ட அளவில் மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர்<br><br>வட்ட வழங்கல் அலுவலர் வருவாய் ஆய்வாளர் உதவி ஆணையாளரின் நிர்வாக அலுவலர் |

**குடும்ப அட்டையின் அடிப்படையில் வழங்கப்படும் பொருட்கள் அளவீடு மற்றும் தற்போதைய விலை**

**அ. மண்ணெண்ணெய் வழங்கல் அளவு**

குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் பெற்றுள்ள எரிவாயு இணைப்பின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், குடும்ப அட்டைகளுக்கு மாதம் 3 லிட்டர் முதல் 15 லிட்டர் வரை.

**மண்ணெண்ணெய் விற்பனை விலை**

எண்ணெய் நிறுவன விநியோக மையம் அமைந்துள்ள தூரத்தின் அடிப்படையில் மண்ணெண்ணெய் விலை லிட்டர் ரூ.13.60 முதல் ரூ.14.20 வரை நிர்ணயம் செய்யப்பட்டு விற்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் | விற்பனை விலை (கிலோ / லிட்டர் ஒன்றுக்கு) | மாதாந்திர விநியோக அளவு |
|---|---|---|---|
| 1 | அரிசி | 01.06.2011 முதல் அரிசி விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது. | 01.11.2016 முதல் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013 ன்படி அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு<br>1 யூனிட் 12கிலோ<br>1.5 யூனிட் 14கிலோ<br>2 யூனிட் 16கிலோ<br>2.5 யூனிட் 18கிலோ<br>3 மற்றும் 4 யூனிட் 20கிலோ<br>5 யூனிட் மற்றும் அதற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் தலா 5 கிலோ வீதம் அதிகப்படுத்தி வழங்கப்படுகிறது. அந்தியோதயா அன்னயோசனா திட்டத்தில் உள்ளகுடும்ப அட்டைதாரர்களுக்கு, குடும்ப அட்டைக்கு தலா 35 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 2 | சர்க்கரை | கிலோ ரூ.13.50/– | அந்தியோதயா அன்னயோசனா திட்டத்தின் (AAY) கீழ் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ஒரு நபருக்கு 500 கிராம் வீதம் அதிகபட்ச அளவு 2 கிலோ. |
| | | கிலோ ரூ.25/– | அந்தியோதயா அன்னயோசனா திட்ட (AAY) குடும்ப அட்டைகள் அல்லாத இதர குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றிற்கு நபருக்கு 500 கிராம் வீதம் அதிக பட் ச அளவு 2 கிலோ. சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக மாதம் ஒன்றிற்கு 3 கிலோ. |
| 3 | கோதுமை | அரசாணை (நிலை) எண்.16, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 02.02.17ன்படி கோதுமை விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது. | சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு அரிசியின் அளவில் அரிசிக்கு பதிலாக 10 கிலோ கோதுமை, இதர பகுதிகளில் 5 கிலோ கோதுமை, இருப்பின் அளவைப் பொறுத்து விலையின்றி வழங்கப்படுகிறது. |
| 4 | மண்ணெண்ணெய் | லிட்டர் ஒன்றுக்கு ரூ.13.60 முதல் ரூ.14.20 வரை | குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் பெற்றுள்ள எரிவாயு இணைப்பின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், குடும்ப அட்டைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 3 லிட்டர் முதல் 15 லிட்டர் வரை. |
| 5 | துவரம் பருப்பு | ஒரு கிலோ ரூ. 30/– | மாதந்தோறும் குடும்ப அட்டை ஒன்றிற்கு 1 கிலோ |
| 6 | பாமாயில் | ஒரு லிட்டர் ரூ.25/– | மாதந்தோறும் குடும்ப அட்டை ஒன்றிற்கு 1 லிட்டர் |

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற பொருள்களின் அவ்வப்போதைய விலை மாற்றங்கள் நியாய விலைக் கடைகளிலுள்ள தகவல் பலகையில் குறிப்பிடப்படும்.

**<u>இ) சிறப்பு பொது விநியோகத் திட்டம்</u>**

வெளிச்சந்தையில் அத்தியாவசிய ப் பொருட்களின் விலை உயர்வை கண்ணுற்ற தமிழ்நாடு அரசு அதன் விளைவாக பொது மக்களுக்கு ஊட்டச்சத்து குறைவு மற்றும் உணவு பாதுகாப்பின்மை ஏற்பட்டு விடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு சிறப்பு பொது விநியோகத் திட்டத்தை பிப்ரவரி 2019 வரை அரசு நீட்டித்துள்ளது .

| வரிசை எண் | அத்தியாவசியப் பொருள் | விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு ரூபாயில் | விநியோக அளவு (ஒரு மாதத்திற்கு) | வழங்கப்படும் தவணை |
|---|---|---|---|---|
| 1 | துவரம்பருப்பு | 30 | குடும்ப அ ட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ | ஒரே தவணையில் |
| 2 | செறிவூட்டப்பட்ட பாமாயில் | 25 (ஒரு லிட்டர் ) | குடும்ப அ ட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 1 லிட்டர் | ஒரே தவணையில் |

மேற்கண்ட அத்தியாவசியப் பொருட்கள் வெளி மாநிலங்களிலிருந்தும் மற்றும் வெளி நாடுகளிலிருந்தும் கொள்முதல் செய்து கொண்டு வரப்படுவதால் இந்த அத்தியாவசியப் பொருட் களை கோரும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மேலும் குடும்ப அட்டைதாரர்கள் இந்த அத்தியாவசியப் பொருட்களை நியாயவிலைக் கடைகளில் வாங்குவதற்கு ஏற்ப அந்தந்த நியாயவிலைக் கடைகளுக்கு இந்த அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

**(உ) <u>அத்தியாவசியப் பொருட்களின் தரம்</u>**

- நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படும் அரிசி மற்றும் கோதுமை மைய அரசு நிர்ணயித்துள்ள தரத்தில் உள்ளன. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் இதர அத்தியாவசியப் பொருட்கள் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் 2006 ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள நியாயமான சீரான தரத்தில் (Fair Average Quality) இருக்கும். மைய அரசின் பொது விநியோக மற்றும் நுகர்வோர் பணிகள் துறை அரிசி மற்றும் கோதுமைக்கான நியாயமான சீரான தரத்தை நிர்ணயம் செய்கிறது.
- பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் இதர அத்தியாவசியப் பொருட்கள் உணவு பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம் 2006ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரத்தில் இருக்கும்.
- இந்திய உணவு கழகத்திலிருந்து உணவு தானியங்கள் எடுப்பதற்கு முன்பாக இந்திய உணவு கழகம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் உணவு தானியங்களின் மாதிரியை எடுத்து சோதனை செய்வர்.
- இந்திய உணவுக் கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கு உணவு தானியங்களை அனுப்பும் போது அவற்றிற்கான மாதிரிகளும் எடுக்கப்பட்டு ஒன்று இந்திய உணவு கழக அலுவலகம் /கிடங்குகளிலும் மற்றொன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் வழங்கப்படும். இந்திய உணவு கழகத்திலிருந்து தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கும், அங்கிருந்து நியாயவிலைக் கடைகளுக்கும் உணவு தானியங்கள் நகர்வு செய்யப்படுவதை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கண்காணிக்கிறது.

- மேலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்திய உணவுக் கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கிற்கு உணவு தானியங்கள் நகர்வு செய்யப்படும் போது வழியில் தரமான உணவு தானியங்கள், தரம் குறைந்த உணவு தானிய இருப்பால் மாற்றம் செய்யப்படாமலிருக்க விழிப்புடன் கண்காணிக்கப்படுகிறது.

  சோதனை முறையில் வாகனங்களில் நகர்வு மற்றும் அவை செல்லும் பாதையை கண்டறியும் GPS பொருத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**ஊ) நியாய விலைக் கடைகள்**

**அ) நியாய விலைக் கடைகள் திறத்தல்**

தமிழ் நாட்டில் பெரும்பாலான நியாய விலைக் கடைகள் கூட்டுறவு சங்கங்களாலும் சில நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன.

- தனியார் எவரும் இம்மாநிலத்தில் நியாய விலைக் கடைகளை நடத்த அனுமதிக்கப்படவில்லை.

- எனினும் கிராமப்புற மகளிரை ஊக்குவிக்கும் வகையிலும், சமுதாயத்தில் பெண்களை பொது விநியோகத் திட்டப் பணியில் ஈடுபடுத்தவும் மாநில அரசு மகளிர் சுயஉதவிக் குழுக்களை சில நியாய விலைக் கடைகளை நடத்த அனுமதித்துள்ளது.

- குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே நியாய விலைக் கடைகளை அமைக்க மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குடும்ப அட்டைதாரர் எவரும் 1.5 கிலோ மீட்டருக்கு மேல் நடந்து சென்று பொருட்கள் வாங்கும் சூழ்நிலை இல்லாத வகையில் புதிய நியாய விலைக் கடைகளை திறக்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

**ஆ) நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கான நாட்கள் விவரம்**

அரசால் அறிவிக்கப்படும் வாராந்திர விடுமுறை நாள் மற்றும் அரசு நியாய விலைக் கடைகளுக்கு அறிவிக்கும் விடுமுறை நாட்கள் தவிர இதர பணி நாட்களில் நியாயவிலை கடைகள் செயல்படுகின்றன. நியாய விலைக் கடைகள் செயல்படும் வேலை நேர விவரம் வருமாறு:

| | |
|---|---|
| அ சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் | காலை 8.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை |
| ஆ இதரப் பகுதிகள் | காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை |

**இ) நியாய விலைக் கடைகளில் எத்தனை தவணைகளில் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்**

குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடையில் அவர்கள் குடும்ப அட்டைக்கு தகுதியான அளவு அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக் கடையின் வேலை நாட்களில் எந்த நாளில் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். அரிசியை அட்டைதாரர்கள் விரும்பியவாறு ஒன்று அல்லது இரண்டு தவணைகளில் பெற்றுக் கொள்ளலாம். குடும்ப அட்டையில் புகைப்படத்தில் உள்ள குடும்பத் தலைவர் அல்லது குடும்ப அட்டையில் இடம் பெற்றுள்ள குடும்ப உறுப்பினர் ஒருவர் நியாய விலைக் கடைக்கு சென்று அத்தியாவசியப் பொருட்களை பெறலாம்.

## ஈ) நியாய விலைக் கடை விற்பனையாளர்களுக்கான சாசனம்

- கடைக்கு வரும் அனைத்து அட்டைதாரர்களிடமும் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் கோரும் அனைத்து தகவல்களையும் பொறுமையுடன் அளிக்க வேண்டும்.
- நியாய விலைக் கடையை உரிய நேரத்தில் திறந்து உரிய நேரத்தில் மூட வேண்டும். குடும்ப அட்டைதாரர்களை தேவையின்றி காக்க வைக்கக்கூடாது.
- எல்லா நியாய விலைக் கடைகளுக்கும் மின்னணு எடை தராசு மற்றும் விற்பனை முனைய இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. நியாய விலைக் கடை விற்பனையாளர் இந்த மின்னணு எடை தராசில் அத்தியாவசியப் பொருட்களை தவறின்றி சரியான விலையில் அட்டைதாரர்களுக்கு வழங்கவேண்டும். தவறான எண்ணத்துடன் செயல்படக்கூடாது. சரியான எடையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதுடன் அட்டைதாரர்கள் மின்னணு எடை தராசில் எடையைக் காட்டும் எண்களை பொது மக்கள் பார்க்கும் வண்ணம் தராசை வைக்க வேண்டும்.
- நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் உள்ள அத்தியாவசியப் பொருட்களை மட்டுமே இவர் விற்பனை செய்ய வேண்டும். சரியான தரத்தில் இல்லாத அத்தியாவசியப் பொருட்கள் குறித்து உயர் அலுவலர்களுக்கு நியாய விலைக் கடை விற்பனையாளர் தெரிவிப்பதுடன் அவற்றை அட்டைதாரர்களுக்கு வழங்காமல் கிடங்கிற்கு திருப்பி அனுப்ப வேண்டும்.
- நியாய விலைக் கடைகள் குடும்ப அட்டைதாரர்களுக்கு தகுதியான அளவு அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களை அரசு நிர்ணயித்த விலையில் குடும்ப அட்டையின் வகைக்கு ஏற்ப வழங்க வேண்டும்.
- நியாய விலைக் கடையின் வேலை நேரம், குடும்ப அட்டைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் விநியோக அளவு, விற்பனை விலை, இருப்பு ஆகிய விவரங்களை நியாய விலைக் கடையில் அதனை நடத்தும் நிறுவனம் பராமரிக்கும் அறிவிப்பு பலகையில் விளம்பரப்படுத்த வேண்டும்.
- அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள நியாய விலைக் கடையின் வேலை நேரத்தில் மட்டுமே குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்க வேண்டும்.
- நியாய விலைக் கடையில் இருக்கும் அத்தியாவசியப் பொருட்களின் மாதிரியை நியாயவிலைக் கடையின் முகப்பில் உள்ள மேசையில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் பார்க்கும் வண்ணம் காட்சிப்படுத்த வேண்டும்.
- அவசர காரியமாக கடை விற்பனையாளர் கடையை விட்டு செல்ல வேண்டியிருந்தால் அது குறித்த அறிவிப்பை அவர் அறிவிப்பு பலகையில் குடும்ப அட்டைதாரர்கள் அறியும் வண்ணம் எழுதி வைப்பதுடன் நியாயவிலைக் கடை அடுத்து திறக்கப்படும் நேரத்தையும் குறிப்பிடவேண்டும்.
- பகுதி நேர நியாய விலைக் கடையாக இருந்தால் ஒவ்வொரு வாரமும் எந்த நாட்களில் எந்த நேரத்தில் நியாயவிலைக் கடை செயல்படும் என்ற விவரத்தை அறிவிப்பு பலகையில் விளம்பரப்படுத்த வேண்டும்.

- பொது விநியோகத் திட்டம் அல்லாத பொருட்களை வாங்க குடும்ப அட்டைதாரர்களை நியாய விலைக் கடை விற்பனையாளர் வற்புறுத்தக்கூடாது.
- நியாய விலைக் கடைக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களுக்கான தேவை பட்டியலை கடை விற்பனையாளர் முன்கூட்டியே கொடுப்பதுடன் நியாயவிலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பின்மை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- குடும்ப அட்டைதாரர்கள் அவர்களது குடும்ப அட்டைக்கு வாங்கும் அத்தியாவசியப் பொருட்கள் குறித்த விநியோக தேதி, விநியோக அளவு, ஆகியவற்றை அத்தியாவசியப் பொருட்கள் வாரியாக தவறு ஏதும் இல்லாமல் விற்பனை முனைய இயந்திரத்தில் பதிவு செய்ய வேண்டும்.
- நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்ய விற்பனை முனைய இயந்திரம் வழங்கப்பட்டுள்ளதால், மின்னணு குடும்ப அட்டை தொடர்பான அனைத்து பரிவர்த்தனைகளும் அதில் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும்.

**உ) நியாய விலைக் கடையில் அறிவிப்பு பலகையில் விளம்பரப்படுத்த வேண்டிய தகவல்கள்**

| | | |
|---|---|---|
| 1 | நியாய விலைக் கடையின்பெயர் | |
| 2 | கடையை நடத்தும் நிறுவனத்தின் பெயர் | |
| 3 | வேலை நேரம் | காலை........ முதல்.....பிற்பகல் வரை |
| 4 | மதிய உணவு இடைவேளை வேலை நேரம் | பிற்பகல்............ முதல்................ வரை |
| 5 | வாராந்திர விடுமுறை நாள் | முதல்<br>பிற்பகல்............ மாலை........ வரை |
| 6 | நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்ட விருப்ப வாரியான குடும்ப அட்டைகள் விவரம் | |
| 7 | நியாய விலைக் கடையில் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விநியோக அளவு மற்றும்விற்பனை விலை விவரம் | |
| 8 | 8 மாதாந்திர ஒதுக்கீடு (அத்தியாவசியப் பொருட்கள் வாரியாக) | |
| 9 | அத்தியாவசியப் பொருட்கள் வாரியாக எடுத்த விவரம் | |

| | | |
|---|---|---|
| 10 | அத்தியாவசியப் பொருட்கள் வாரியாக தினசரி இருப்பு விவரம் | |
| 11 | கடைக்கு மண்ணெண்ணெய் வழங்கும் வணிகரின் பெயர் விவரம் | |
| 12 | நியாய விலைக் கடை பணியாளர் பெயர் | |
| 13 | புகார் தெரிவிக்க வேண்டிய அலுவலர்கள் விவரம் மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் / அரசுச் செயலர் /ஆணையர் / மாவட்ட ஆட்சித் தலைவர் / துணைஆணையர் (நகரம்) /மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்/ வட்ட வழங்கல் அலுவலர் /உதவி ஆணையாளர்/ கூட்டுறவுச் சங்கம் தொலைபேசி எண்கள் | |

**ஏ) நுகர்வோர் நியாய விலைக் கடை தொடர்பாக பெறக்கூடிய தகவல்கள்**

- ஒரு நியாய விலைக் கடைக்கு உரிய அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீடு விவரங்களை துறையின் இணையதளமான www.tnpds.gov.in ல் பார்க்க முடியும்.
- குடும்ப அட்டைதாரர்கள் இணையம் (website) மற்றும் கைப்பேசி செயலி (tnepds) வாயிலாக கீழ்க்கண்ட விவரங்கள் அறிய இயலும்.

1. நியாய விலைக் கடை திறந்துள்ளதா ?
2. அப்போதைய அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு விவரம்
3. குடும்ப அட்டைதாரர் கடந்த மாதங்களில் பொருட்கள் வாங்கிய விவரம்
4. குடும்ப அட்டைதாரர் சுய விவரம் மற்றும் குடும்ப உறுப்பினரின் விவரம்

**ஏ) பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டிற்கு நுகர்வோர் எவ்வாறு உதவி செய்யலாம் .**

1. குடும்ப உறுப்பினர்கள் அல்லாதவர்களை குடும்ப அட்டையை பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

2. குடும்ப அட்டைக்கு பெறும் அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரரின் குடும்பம் தான் பயன்படுத்த வேண்டும், அந்த அத்தியாவசியப் பொருட்களை பிறருக்கு விற்பனை செய்யக்கூடாது.

3. முகவரி மாற்றம் தொடர்பான தகவலை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

4. மின்னணு குடும்ப அட்டைகளை அடமானம் வைப்பதோ, விற்பனை செய்வதோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

5. மின்னணு குடும்ப அட்டை பெறுவதற்கு மனுதாரர்கள் சரியான தகவல்களை அளிக்க வேண்டும். தவறான தகவல்கள் அளிப்பது குற்றமாகும்.

6. தகுதியற்ற மின்னணு குடும்ப அட்டைகள் ஏதேனும் சுற்றில் இருந்தாலோ நியாய விலைக் கடைகளில் முறைகேடுகள் நடந்தாலோ அவை உடடினயாக உறுதியாக அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இது உண்மையான குடும்ப அட்டைதாரர்கள் அவர்களது குடும்ப அட்டைக்கு தகுதியான அளவு அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக் கடையில் பெற வழிவகுக்கும்.

7. குடும்ப அட்டைதாரர்கள் அவர்கள் பெற்ற அத்தியாவசியப் பொருட்களை கடையை விட்டு எடுத்து செல்வதற்கு முன்பு கடைப்பணியாளர் சரியான எடையில் வழங்கியுள்ளாரா என்பதனை மின்னணு தராசில் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். கடையில் பயன்படுத்தப்படும் மின்னணு தராசைச் சோதனை செய்ய நுகர்வோர் கடை விற்பனையாளரை வலியுறுத்தலாம்.

8. குடும்ப அட்டைதாரர்கள் அவர்கள் வாங்கிய அத்தியாவசியப் பொருட்களின் அளவு தான் குறுஞ்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதனை கடையை விட்டு செல்லும் முன்பு சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

9. குடும்ப அட்டைதாரர்கள் அவர்களது மின்னணு குடும்ப அட்டைகளை நியாய விலைக் கடை விற்பனையாளரிடம் விட்டுச் செல்லக்கூடாது.

10. மனுதாரர்கள் குடும்ப அட்டைகள் தொடர்பான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தரகர்களை நம்பி ஏமாறக்கூடாது. மனுதாரர்களை தரகர்கள் அல்லது இடை தரகர்கள் அணுகினால் உடன் மாவட்ட வழங்கல் அலுவலரை / மாவட்ட குறைதீர் அலுவலரை / மாவட்ட ஆட்சித் தலைவரை தொடர்பு கொண்டு விவரம் தெரிவிக்கலாம்.

11. குடும்ப அட்டைதாரர்கள் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நியாய விலைக் கடையில் பொருட்கள் பெற விரும்பாவிட்டால் இணையம் மற்றும் கைப்பேசி செயலியில் உள்ள "விட்டுக்கொடுத்தல்" வசதியினை பயன்படுத்தி அவர்தம் குடும்ப அட்டை தவறாக பயன்படுத்துவதனை தடுக்கலாம்.

**ஐ) ஆய்வு மற்றும் கண்காணிப்பு**

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களால் மாதாந்திர பொது விநியோக திட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்பட்டு பொதுவிநியோக திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து துறை / நிறுவன அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. நியாயவிலை கடைகளுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களுக்கான ஒதுக்கீடு மற்றும் அதன் அடிப்படையில் நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களின் நகர்வு, நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு விவரம் ஆகியவையும் இந்த வாராந்திர கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆய்வு செய்யப்படுகிறது. சென்னை நகரத்தை பொறுத்த வரை உணவு பொருள் வழங்கல் துறை இணை ஆணையர் இந்த ஆய்வினை மேற்கொள்கிறார்.

1. பொது விநியோகத் திட்டத்தில் செய்யப்படும் மாற்றங்கள், வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களுக்கான ஒதுக்கீடு விவரம், அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு நிலவரம் ஆகியவை குறித்து ஒவ்வொரு மாதமும் உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரால் பத்திரிக்கைச் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

2. பொது விநியோகத் திட்டத்தை கண்காணித்து அதில் உரிய மாற்றங்கள் கொண்டு வருவதற்கும், ஆலோசனை பெறுவதற்கும், புகார்கள் ஏதுமிருப்பின் அது தொடர்பான விவரங்களை பெறுவதற்கும், தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின்படி மாவட்ட/வட்ட/நியாய விலைக் கடை வாரியாக விழிப்பு பணி குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் தொடர்பான செயல்பாடுகளை ஆராய்ந்து புகார்கள் பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், புகார்களுக்கு காரணமான அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், மாநில உணவு ஆணையம் மூத்த ஓய்வு பெற்ற ஆட்சிபணி அலுவலர் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

3. ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது விநியோகத் திட்ட குறைதீர் அலுவலர்கள் செயல்பட்டு வருகின்றனர். சென்னை தவிர இதர மாவட்டங்களை பொறுத்தமட்டில் தொடர்புடைய மாவட்ட வருவாய் அலுவலர்களும், சென்னை நகரில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணை ஆணையாளர்கள், பொது விநியோகத் திட்ட மாவட்ட குறைதீர் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

4. மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் தொடர்பான செயல்பாடுகளை ஆராய்ந்து புகார்கள் பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், புகார்களுக்கு காரணமாக அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், மாநில உணவு ஆணையம் மூத்த ஓய்வு பெற்ற ஆட்சிப் பணி அலுவலர் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

**ஓ) நுகர்வோர் குறைகளை களையும் முறை**

குடும்ப அட்டைதாரர்கள் அவர்களது புகார்களை கீழ்க்கண்டவாறு பதிவு செய்யலாம்:–

- கட்டணமில்லா தொலைபேசி எண் 1967/ 1800 425 5901.
- மின்னஞ்சல் வாயிலாக தொடர்புடைய மாவட்ட வழங்கல் அலுவலர் / வட்ட வழங்கல் அலுவலர் / துணை ஆணையாளர்களுக்கு புகார் வழங்கலாம்.
- மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் /துணைஆணையர் (நகரம்) வடக்கு / தெற்கு ஆகியோருக்கு புகார்களை அனுப்பலாம்.
- 9980904040 என்ற எண்ணுக்கு போலி பட்டியல் குறித்த புகாரினை PDS (107) என்று குறுஞ்செய்தியாக தங்களது பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிலிருந்து அனுப்பலாம், அல்லது தங்களது ரசீது குறித்த குறுஞ்செய்தியினை மேற்படி எண்ணிற்கு மேலனுப்பலாம் (Forward)
- மனுதாரர்கள் தங்களது விண்ணப்பம் குறித்த நிலை அறிய www.tnpds.gov.in என்ற இணையதளத்தை அணுக வேண்டும். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாவட்ட தலை நகரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்படும் வாராந்திர பொது மக்கள் குறைதீர் கூட்டத்தில் புகார்களை அளிக்கலாம் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நிகரி/மின்னஞ்சல் மூலமும் தெரிவிக்கலாம்.
- உள்ளூர் வட்ட வழங்கல் அலுவலர்அல்லது உதவி ஆணையருக்கு கைப்பேசி/தொலைபேசி மூலமாக புகார்களைத் தெரிவிக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலரின் கைப்பேசி/தொலைபேசி எண்கள் விவரம் நியாயவிலைக் கடையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஓ) செயலாக்கம்**

- பொது விநியோகத்திட்ட செயலாக்கம், கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் ஆகியன உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. மாநில அளவில் உதவி ஆணையாளர் (ஆய்வு) மற்றும் பறக்கும்படை கண்காணிப்பாளர் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளருக்கு செயலாக்க பணிகளில் உதவுகின்றனர்.
- மாவட்ட அளவில் பொது விநியோகத் திட்ட செயலாக்கப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒருங்கிணைக்கின்றனர்.
- அனைத்து மாவட்டங்களிலும் சென்னை நகரம் உட்பட பறக்கும் படைகள் ஏற்படுத்தப்பட்டு பொது விநியோகத் திட்டம் உன்னிப்பாக கண்காணிக்கப்படுவதுடன் பொது விநியோகத்திட்ட அத்தியாவசியப் பொருட்கள் கடத்தல் தடுப்பு பணியும் மேற்கொள்ளப்படுகிறது.
- இந்திய உணவு கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்யும் போதும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகக் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்யும் போதும் வழியில் அத்தியாவசியப் பொருட்களின் கடத்தலை தடுப்பதற்கு நகர்வு கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் அரசுச் செயலர் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்களால் சிறப்பு தணிக்கைக் குழுக்கள் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டு குறிப்பிட்ட மாவட்டங்களில் இந்த சிறப்பு தணிக்கைக் குழுவினர் தணிக்கை மேற்கொள்கின்றனர்.

**ஔ) தகவல் பெறுவதற்கான உரிமை**

**தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்படி கீழ்க்கண்ட அலுவலர்களிடமிருந்து தகவல் பெறலாம்.**

2005–ம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் விவரம்

| வ. எண் | அலுவலகம் | உதவி தகவல் வழங்கும் அலுவலர் | தகவல் வழங்கும் அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|---|
| 1 | ஆணையாளர் அலுவலகம், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 5. | உதவி ஆணையாளர் II<br>உதவி ஆணையாளர் I | துணை ஆணையாளர் II 044–28583144<br>துணை ஆணையாளர் 1 044–28510760 | இணை ஆணையாளர் 044 – 28583139 |
| 2 | துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு எழிலகம் இணைப்பு கட்டிடம் 4–வது மாடி சேப்பாக்கம், சென்னை – 5. | கண்காணிப்பாளர் | மேலாளர் | துணை ஆணையாளர் 044–28551028 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | துணை ஆணையாளர் (நகரம்) தெற்கு எழிலகம் இணைப்புகட்டிடம் 4–வது மாடி சேப்பாக்கம், சென்னை – 5. | கண்காணிப்பாளர் | மேலாளர் | துணை ஆணையாளர்<br><br>044–28551026 |
| 4 | மாவட்ட வழங்கல் அலுவலர், அலுவலகங்கள் | மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் | மாவட்ட வழங்கல் அலுவலர் | மாவட்ட வருவாய் அலுவலர் |
| 5 | வட்ட வழங்கல் அலுவலர் | உதவியாளர் / சிறப்பு வருவாய் ஆய்வாளர் | வட்ட வழங்கல் அலுவலர் | வருவாய் கோட்ட அலுவலர் |
| 6 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சிதம்பரனார் மண்டலம் எண். 14, மூர் தெரு, சென்னை – 600001 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044–25267603 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 7 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, இராயபுரம் மண்டலம் எண். 9B, சோமு தெரு, 6–வது தெரு, இராயபுரம், சென்னை – 600 021. | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044–25953285 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 8 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>பெரம்பூர் மண்டலம்<br>எண். 29, பாரதி சாலை வெள்ளையன் மார்க்கெட் அருகில், பெரம்பூர் சென்னை – 600 011 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044– 25513050 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 9 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, அண்ணாநகர் மண்டலம் எண். 116, ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, புரசைவாக்கம், சென்னை – 600 084 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044–28363265 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 10 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>அம்பத்தூர் மண்டலம்<br>எண்.58, எம்.டி.எச்.சாலை,<br>சென்னை – 600 053 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044 – 26250309 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 11 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>வில்லிவாக்கம் மண்டலம்<br>ஸ்டேசன் ரோடு, வில்லிவாக்கம்,<br>சென்னை – 600 049 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044–26171451 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 12 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>திருவெற்றியூர் மண்டலம்<br>எண்.936, திருவெற்றியூர் | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044–25992828 | மேலாளர் | உதவி ஆணையாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நெடுஞ்சாலை நகராட்சி திருமண கூடம்,<br>திருவெற்றியூர்<br>சென்னை – 600 019 | | | |
| 13 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை , ஆவடி மண்டலம்<br>எண் 8 கிருஷ்ணமேனன் தெரு, காந்தி நகர், சென்னை 600 054 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு )<br>044–26375560 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 14 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ,<br>ஆர்.கே.நகர் மண்டலம்<br>எச் எல் எல் சுனாமி குடியிறுப்பு ஏஏ திட்ட சாலை தண்டையார் பேட்டை,<br>சென்னை 600 081 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு )<br>044–25913285 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 15 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>தி.நகர் மண்டலம் வித்யோதயா பள்ளி சாலை, தி.நகர்,<br>சென்னை – 600 017 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044–28341699 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 16 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>மயிலாப்பூர் மண்டலம்<br>எண்.4, வெங்கடேச அக்ரஉறாரம் தெரு, மயிலாப்பூர்,<br>சென்னை – 600 004 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044–24942613 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 17 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>பரங்கிமலை மண்டலம்<br>எண்.1, ஏரிக்கரை ரோடு , ஆதம்பாக்கம் , சென்னை – 600 088 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044–22604411 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 18 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>தாம்பரம் மண்டலம்<br>தாம்பரம் வட்டாட்சியர் அலுவலக வளாகம்,<br>ஜி,எஸ்.டி.ரோடு,<br>சென்னை 47 (மெப்ஸ் எதிரில் ) | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044–22262737 | மேலளர் | உதவி ஆணையாளர் |
| 19 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>சைதாப்பேட்டை மண்டலம்<br>கால்நடை மருத்துவமனை சாலை, பேர்ன் பேட்டை முதல் தெரு,<br>நந்தனம்,<br>சென்னை – 600 035 | கண்காணிப்பாளர் (குடும்ப அட்டை பிரிவு)<br>044–24328198 | மேலாளர் | உதவி ஆணையாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>ஆயிரம் விளக்கு மண்டலம்<br>வித்யோத்யா பள்ளி சாலை, தி. நகர்,<br>சென்னை – 600 017 | கண்காணிப்பாளர்<br>(குடும்ப அட்டை பிரிவு)<br>044–28340276 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 21 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>சேப்பாக்கம் மண்டலம்<br>எண். 35, சேப்பாக்கம் பறக்கும் ரயில் சாலை,<br>சேப்பாக்கம்,<br>சென்னை – 600 005 | கண்காணிப்பாளர்<br>(குடும்ப அட்டை பிரிவு)<br>044–28554934 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 22 | உதவி ஆணையாளர்<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>சோழிங்கநல்லூர் மண்டலம்<br>எண்.147, புதிய குமரன் நகர், முதல் குறுக்கு தெரு,<br>சோழிங்கநல்லூர்,<br>சென்னை – 600 119. | கண்காணிப்பாளர்<br>(குடும்ப அட்டை பிரிவு)<br>044–24502575 | மேலாளர் | உதவி ஆணையாளர் |
| 23 | நியாய விலைக் கடைகள் | பட்டியல் எழுத்தர் / விற்பனையாளர் | பகுதி அலுவலர் / முதன்மை சங்கம் / இணைப்பு சங்கம் | கூட்டுறவு சார் பதிவாளர் / மண்டல மேலாளர் , தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் |

| வ எண் | அலுவலகத்தின் பெயர் | அலுவலக முகவரி | தொலைபேசி/ மின் அஞ்சல் |
|---|---|---|---|
| 1 | ஆணையாளர்,<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை | ஆணையாளர்,<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>எழிலகம், 4வது மாடி, சேப்பாக்கம்,<br>சென்னை – 5. | அலுவலகம்<br>28592255<br>வீடு<br>ccs@tn.gov.in |
| 2 | துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு | உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>எழிலகம் இணைப்பு கட்டிடம் 4–வது மாடி, சேப்பாக்கம்,<br>சென்னை – 5. | 044/28551028<br>dccpo.chennai_north@tn.gov.in |
| 3 | துணை ஆணையாளர் (நகரம்) தெற்கு | உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,<br>எழிலகம் இணைப்புக்கட்டிடம் 4வது மாடி,சேப்பாக்கம்,<br>சென்னை – 5. | 044–28551026<br>dccpo.chennai_south@tn.gov.in |

| | | | |
|---|---|---|---|
| 4 | உதவி ஆணையாளர்,<br>சிதம்பரனார் மண்டலம். | எண்.14, மூர் தெரு, சென்னை –<br>600 001 | 044–25267603<br>acchn.chidambaranar<br>@tn.gov.in |
| 5 | உதவி ஆணையாளர்,<br>இராயபுரம் மண்டலம். | எண்: 9/1, சோமு தெரு,<br>6–வது சந்து, இராயபுரம், சென்னை<br>– 600 013. | 044–25953285<br>acchn.royapuram@tn.<br>gov.in |
| 6 | உதவி ஆணையாளர்<br>பெரம்பூர் மண்டலம். | எண்: 29 ,பாரதி சாலை<br>வெள்ளையன் மார்க்கெட் அருகில் ,<br>பெரம்பூர்,<br>சென்னை – 600 011. | 044–25513050<br>acchn.perambur@tn.gov.in |
| 7 | உதவி ஆணையாளர்,<br>அண்ணாநகர் மண்டலம். | எண்:116, ஈ.வெ.ரா நெடுஞ்சாலை,<br>புரசைவாக்கம் ,<br>சென்னை – 600 084. | 044–28363265<br>acchn.annanagar@tn.<br>gov.in |
| 8 | உதவி ஆணையாளர்,<br>அம்பத்தூர் மண்டலம். | எண்: 58/195, எம்.டி.எச்.சாலை,<br>அம்பத்தூர்,<br>சென்னை – 600 053. | 044–26250309<br>acchn.ambattur@tn.gov.in |
| 9 | உதவி ஆணையாளர்,<br>வில்லிவாக்கம் மண்டலம். | 44/1 ஸ்டேசன் ரோடு,<br>வில்லிவாக்கம், சென்னை 49 | 044-26171451<br>acchn.villivakkam@tn.<br>gov.in |
| 10 | உதவி ஆணையாளர்,<br>திருவொற்றியூர் மண்டலம். | எண்: 936, திருவொற்றியூர்<br>நெடுஞ்சாலை நகராட்சி திருமண<br>கூடம், திருவொற்றியூர்,<br>சென்னை – 600 019 | 044-25992828<br>acchn.thiruvotriyur<br>@tn.gov.in |
| 11 | உதவி ஆணையாளர்,<br>ஆர்.கே.நகர் மண்டலம் | எச் எல் எல் சுனாமி குடியிருப்பு, ஏஏ<br>திட்ட சாலை தண்டையார்பேட்டை,<br>சென்னை 600 081 | acchn.rknagar@tn.gov.in |
| 12 | உதவி ஆணையாளர்,<br>ஆவடி மண்டலம். | எண் 9, கிருட்டிண மேனன் தெரு,<br>காந்தி நகர், ஆவடி<br>சென்னை 54 | 044-26375560<br>acchn.avadi@tn.gov.in |
| 13 | உதவி ஆணையாளர்,<br>தி.நகர் மண்டலம். | வித்யோத்யா பள்ளி சாலை, தி.நகர்,<br>சென்னை – 600 017. | 044-28341699<br>acchn.tnagar@tn.gov.in |
| 14 | உதவி ஆணையாளர்,<br>மயிலாப்பூர் மண்டலம். | எண் : 4, வெங்கடேச அக்ரஉறாரம்<br>தெரு,<br>மயிலாப்பூர்,<br>சென்னை – 600 004 | 044-24942613<br>acchn.mylapore@tn.gov.in |
| 15 | உதவி ஆணையாளர்,<br>பரங்கிமலை மண்டலம். | எண்: 1 ஏரிக்கரை ரோடு<br>ஆதம்பாக்கம்<br>சென்னை – 600 088. | 044-22604411<br>acchn.mount@tn.gov.in |
| 16 | உதவி ஆணையாளர்,<br>தாம்பரம் மண்டலம். | தாம்பரம் வட்டாட்சியர் அலுவலக<br>வளாகம், ஜி.எஸ்.டி. ரோடு,<br>சேனிடோரியம்,<br>சென்னை 47<br>(மெப்ஸ் எதிரில்) | 044-22412737<br>acchn.tambaram@tn.gov.in |
| 17 | உதவி ஆணையாளர்,<br>சைதாப்பேட்டை மண்டலம். | கால்நடை மருத்துவமனை சாலை,<br>போர்ன் பேட்டை முதல் தெரு,<br>நந்தனம்,<br>சென்னை – 600 035. | 044-24328198<br>acchn.saidapet@tn.gov.in |
| 18 | உதவி ஆணையாளர்,<br>ஆயிரம் விளக்கு மண்டலம். | வித்யோத்யா பள்ளி சாலை,<br>தி.நகர், சென்னை 600 017 | 044-28340276<br>acchn.thousandlights<br>@tn.gov.in |

| | | | |
|---|---|---|---|
| 19 | உதவி ஆணையாளர்,<br>சேப்பாக்கம் மண்டலம். | கால்வாய் கரைசாலை, சேப்பாக்கம்<br>ரயில் நிலையம் எதிரில், சேப்பாக்கம்,<br>சென்னை – 600 005 | **044–28544934**<br>acchn.chepauk@tn.gov.in |
| 20 | உதவி ஆணையாளர்,<br>சோழங்கநல்லூர் மண்டலம். | 147, புதிய குமரன் நகர், முதல் குறுக்கு தெரு, சோழிங்கநல்லூர்,<br>சென்னை 600 119 | 044-24502575<br>acchn.solinganallur@tn.gov.in |
| 21 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>காஞ்சிபுரம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>காஞ்சிபுரம் | 04112-237424<br>dso.kpm@tn.gov.in |
| 22 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>திருவள்ளூர் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருவள்ளூர் | 04116/262400<br>dso.tvl@tn.gov.in |
| 23 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>வேலூர் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>வேலூர் | 0416/2252586<br>dso.vlr@tn.gov.in |
| 24 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>திருவண்ணாமலை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருவண்ணாமலை | 04175/233063<br>dso.tvm@tn.gov.in |
| 25 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>விழுப்புரம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>விழுப்பரம் | 04146/223268<br>dso.vpm@tn.gov.in |
| 26 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>கடலூர் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>கடலூர் | 04142/230223<br>dso.cid@tn.gov.in |
| 27 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>தருமபுரி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>தருமபுரி | 04342/230562<br>dso.dpi@tn.gov.in |
| 28 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>சேலம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>சேலம் | 0427/2451943<br>dso.slm@tn.gov.in |
| 29 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>நாமக்கல் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>நாமக்கல் | 04286/281112<br>dso.nmk@tn.gov.in |
| 30 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>ஈரோடு | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>ஈரோடு | 0424/2260207<br>dso.erd@tn.gov.in |
| 31 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>கோயம்புத்தூர் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>கோயம்புத்தூர் | 0422/2300569<br>dso.cbe@tn.gov.in |
| 32 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>நீலகிரி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>நீலகிரி | 0423/2444012<br>dso.nlg@tn.gov.in |
| 33 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>கரூர் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>கரூர் | 04324/257510<br>dso.kar@tn.gov.in |
| 34 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>பெரம்பலூர் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>பெரம்பலூர் | 04328/277923<br>dso.pmb@tn.gov.in |
| 35 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>திருச்சி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருச்சி | 0431/2411474<br>dso.try@tn.gov.in |
| 36 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>தஞ்சாவூர் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>தஞ்சாவூர் | 04362/231336<br>dso.tnj@tn.gov.in |
| 37 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>திருவாரூர் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திருவாரூர் | 04366/220510<br>dso.tvr@tn.gov.in |
| 38 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>நாகப்பட்டினம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>நாகப்பட்டினம் | 04365/252500<br>dso.ngp@tn.gov.in |
| 39 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>புதுக்கோட்டை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>புதுக்கோட்டை | 04322/221626<br>dso.pdk@tn.gov.in |
| 40 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>திண்டுக்கல் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>திண்டுக்கல் | 0451/2460097<br>dso.dgl@tn.gov.in |
| 41 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>தேனி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>தேனி | 04546/255046<br>dso.thn@tn.gov.in |
| 42 | மாவட்ட வழங்கல் அலுவலர்,<br>மதுரை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>மதுரை | 0452/2532501<br>dso.mdu@tn.gov.in |

| | | | |
|---|---|---|---|
| 43 | மாவட்ட வழங்கல் அலுவலர், சிவகங்கை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சிவகங்கை | **04575/241516** dso.svg@tn.gov.in |
| 44 | மாவட்ட வழங்கல் அலுவலர், விருதுநகர் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் விருதுநகர் | 04562/252397 dso.vnr@tn.gov.in |
| 45 | மாவட்ட வழங்கல் அலுவலர், இராமநாதபுரம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராமநாதபுரம் | 04567/230056 dso.rmd@tn.gov.in |
| 46 | மாவட்ட வழங்கல் அலுவலர், தூத்துக்குடி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தூத்துக்குடி | 0461/2340601 dso.tut@tn.gov.in |
| 47 | மாவட்ட வழங்கல் அலுவலர், திருநெல்வேலி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருநெல்வேலி | 0462/2500761 dso.tnv@tn.gov.in |
| 48 | மாவட்ட வழங்கல் அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நாகர்கோவில். | 04652/278035 dso.kkm@tn.gov.in |
| 49 | மாவட்ட வழங்கல் அலுவலர், கிருட்டிணகிரி மாவட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கிருட்டிணகிரி | 04343/234677 dso.kgi@tn.gov.in |
| 50 | மாவட்ட வழங்கல் அலுவலர், அரியலூர் மாவட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அரியலூர் | dso.ari@tn.gov.in |
| 51 | மாவட்ட வழங்கல் அலுவலர், திருப்பூர் மாவட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருப்பூர் | 0421/ 2218203 dso.tiruppur@tn.gov.in |